## க. பொ. த. உயர்தரம்

# இந்து சமயம்

1987 **9 வருட** 1993

### கடந்த கால வினாத்தாள் தொகுப்பு


தொகுப்பு:- திரு. கா. யோ. கிரிதரன்
(ஆசிரியர் - இந்து சமயம், புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்.)


## G.C.E A/L

பகுதி I

பகுதி II

# HINDUISM

## 9 YEARS PAST QUESTIONS PAPERS
## 1987—1993

- 1987 August
- 1988 August
- 1989 August
- 1990 August
- 1990 (1991 Special)
- 1991 August
- 1991 (1992 Special)
- 1992 August
- 1993 August


காந்தம் பதிப்பகம்
5, அத்தியடி புதிய வீதி, யாழ்ப்பாணம்.

S. Rekha

க. பொ. த (உயர்தர)ப் பரீட்சை.

கடந்த கால வினாத் தாள்கள்

# இந்துசமயம்

# HINDUISM

பகுதி I பகுதி II

1. * 1993 ஓகஸ்ட்
2. * 1992 ஓகஸ்ட்
3. * 1991 ஓகஸ்ட்
4. * 1991 (1992 விசேடம்
5. * 1990 ஓகஸ்ட்
6. * 1990 (1991 விசேடம்)
7. * 1989 ஓகஸ்ட்
8. * 1988 ஓகஸ்ட்
9. * 1987 ஓகஸ்ட்

## G. C. E A/L

## 9 வருட

கடந்த கால வினாத் தாள்கள்


தொகுப்பு:- திரு. கா. யோ. கிரிதரன்
(ஆசிரியர்-இந்துசமயம்)
புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



வெளியிடுவோர்:-

காந்தம் வெளியீடு.
5. அத்தியடி புதிய வீதி
யாழ்ப்பாணம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஒகஸ்ட் 1987

## (22) இந்துசமயம் 1

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடை தருக.

   1) வேதங்களில் 'ரிதம்' என்பது சுட்டும் பொருள் யாது?
   2) வேதகாலக் கடவுளரின் முக்கிய பொறுப்புக்கள் யாது?
   3) 'பிரஜாபதி' என்பது எப்பொருளைச் சுட்டும்?
   4) ஆரணியகங்கள் எனப்படும் வன நூல்கள் விளக்கும் பொருள் யாது?
   5) சிவன் எந்த மலையிலிருந்து கொண்டு ஆகமங்களை ஓதினார் எனக் கூறப்படுகிறது?
   6) வைணவருக்குரிய ஆகமங்கள் எப் பெயரால் அழைக்கப்படும்?
   7) 'மானவதர்மசாத்திரம்' என்னும் நூலின் ஆசிரியர் பெயர் யாது?
   8) கிருஷ்ணபகவான் இனிமேல் எடுக்கவிருக்கும் அவதாரம் எப்பெயர் பெறும்?
   9) சாங்கிய தத்துவத்தை முறைப்படுத்தி எழுதியவர் யார்?
   10) வாதராயணர் ஆக்கிய நூலின் பெயர் யாது?
   11) உத்தர மீமாம்சை முக்கிய பகுதியாகக் கொள்ளும் நூல்கள் யாவை?
   12) அத்துவைதம் போதிக்கும் அடிப்படைக் கொள்கை யாது?
   13) சங்கரர் தம் பரமகுரு எனச் சிறப்பித்துக் கூறப்படுபவர் யார்?
   14) இராமானுசரின் கருத்துப்படி பிரமம் சகுணமா அல்லது நிர்க்குணமா?
   15) சூரியக் கடவுளர் வேதங்களில் எப்பெயரால் குறிப்பிடப்படுவர்?
   16) சைவசித்தாந்த சமய இலக்கியங்களில் பாசுபதம் தொடக்கம் எத்தனை சைவசமய வகைகள் கூறப்படுகின்றன?
   17) ஆன்மாவைச் சுத்தப்படுத்தவும் வீடுபேறு அடைதற்குத் தகுதி உடையதாகவும் சைவசமயத்தன் கைக்கொள்ளும் சடங்கின் பெயர் யாது?
   18) சித்தாந்த நூல்கள் பதினான்கினுள் காலத்தால் முந்திய நூல் யாது?
   19) சிவப்பிரகாசம் என்னும் நூலின் முதல் நூலாகக் கருதப்படுவது எந்நூல்?
   20) ''சங்கற்ப நிராகரணம்'' என்பதன் பொருள் யாது?

   (30 புள்ளிகள்)

2. நால் வேதங்களும் எவ்வெக் காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன என்பதனையும் அவ்விதம் வகுக்கப்பட்டதற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

3. உபநிடதங்கள் கூறும் பிரமத்தின் இயல்பு எத்தகையது என்பதை விளக்கி, பிற்காலத்து அத்துவித வேதாந்த தத்துவ வளர்ச்சிக்கு அது எவ்வாறு வித்திட்டது என்பதை ஆராய்ந்து கூறுக. (14 புள்ளிகள்)

4. சைவசித்தாந்தங் கூறும் ஆன்மாவின் இயல்பினை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

5. வேதாந்த தத்துவ வளர்ச்சிக்குச் சங்கரர் ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

6. விக்கிரக வழிபாடு, திருவிழா, விரதங்கள் ஆகியன ஆகமவிதி முறைகளின் அடிப்படையாமாற்றை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

7. முத்திநிலை அல்லது வீடுபேறு பற்றிச் சைவ சித்தாந்திகள் கூறுங் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக. (14 புள்ளிகள்)

8. ஆண்டாள் அல்லது பெரியாழ்வார் பாடல்களிலே திருமாலின் பெருமை கூறப்பட்டிருக்குமாற்றை வருணிக்குக. (14 புள்ளிகள்)

9. சைவசமய வளர்ச்சிக்கு உமாபதிசிவாச்சாரியார் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிட்டுக் கூறுக. (14 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஒகஸ்ட் 1987

## (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.

1) முத்தி இன்பத்தை நுகர்தற்கு அரும்புபோலத் தோன்றும் மார்க்கம் என நால்வகை மார்க்கங்களுள் எது வருணிக்கப்படுகிறது?
2) அகத்தொழிலால் அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு எப்பெயர் பெறும்?
3) 'சாயுச்சியம்' என்பதன் பொருளைத் தெளிவுபடுத்துக.
4) யோக மார்க்கங்களுள் 'தன்னலமற்ற சேவை மார்க்கம்' என வருணிக்கப்படுவது எது?
5) இறைனிடம் ஆன்மாவைச் சரணடையச் செய்யும் புத்தி வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?
6) சிவன் முத்தர் யார் விளக்கி எழுதுக?
7) பெரியபுராண பெரியார்களுள் எத்தனை அடியவர்கள் சிவலிங்கத்தை வழிபட்டு நற்கதி பெற்றவர்கள்?
8) குரு என்ற சொல்லின் பொருள் யாது?
9) இறைவன் குருவடிவாக வந்த விஞ்ஞானகலரை ஈடேற்றுவார் எனக் கூறுவது பொருந்துமா?
10) சிவலிங்கத்தின் பீடம்போல் அகன்ற கீழ்ப்பாகம் எதனைக் குறித்து நிற்கும்?
11) பரார்த்தலிங்கம் எனப்படுவது யாது?
12) குலச்சிறை நாயனாரின் சங்கம பத்தியைப் புகழ்ந்து பாடிய நாயனார் யார்?
13) கோயில்களில் கும்பாபிஷேகம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டுமென்பது விதி?
14) சைவசாதனங்கள் மூன்றும் எவை?
15) உருத்திராக்க மாலையில் உள்ள 32 உருத்திராக்கங்களும் எப்பொருளைச் சுட்டி நிற்கும்
16) நடராசர் வடிவம் சுட்டும் பொருள் யாது?
17) நடராசரின் எவ்வுறுப்பு குஞ்சித பாதம் எனப்படும்?
18) வருணாச்சிரமம் என்பதன் பொருள் யாது?
19) இந்துசமயக் கோட்பாடுகளின்படி தர்மங்களின் பாதுகாவலன் இல்லறத்தானா? சந்நியாசியா?
20) விநாயக சதுர்த்தி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்? (30 புள்ளிகள்)

2. மாணிக்கவாசகரின் வாழ்க்கைநெறி ஞான மார்க்கத்துக்கு எடுத்துக்காட்டாக அமையுமாற்றை ஆராய்ந்து கூறுக. (14 புள்ளிகள்)

3. பத்தியோகமாவது யாது? பகவத்கீதை அதனை எவ்வாறு கரும யோகத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறதென்பதை ஆராய்க. (14 புள்ளிகள்)

4. சிவலிங்கத்தின் பெருமையினையும் அதன் வகைகளையும் விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

5. திருத்தொண்டர்களின் சாதனைகள் பற்றியும் அவரை வழிபடல் பற்றியும் சைவநூல்கள் கூறுவனவற்றைச் சுருக்கமாகத் தருக. (14 புள்ளிகள்)

6. திருக்கோயிலில் நிகழும் பூசையின் அமிசங்கள் உணர்த்தும் தத்துவப் பொருள்களை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

7. உரிமைகளை வற்புறுத்திக் கடமைகளைப் புறக்கணிப்பது இந்துமத தருமம் ஆகாது விளக்குக. (14 புள்ளிகள்)

8. இந்துக்களின் மறுபிறப்புக் கோட்பாட்டினை விளக்கி அதற்கும் கருமக் கோட்பாட்டிற்குமுள்ள தொடர்புகளை ஆராய்ந்து கூறுக. (14 புள்ளிகள்)

9. "இந்து சமயக் கோட்பாடுகளின்படி இல்லறத்தின் வழியதே" துறவு விளக்குக. (14 புள்ளிகள்)

கலவிப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஓகஸ்ட் 1988

## (22) இந்துசமயம் I

(முதலாம் வினாவின் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் ஏறத்தாழ 5 வரிகளுக்கு உட்பட்டவும் நீர் தெரிவு செய்யும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஏறத்தாழ 50 - 60 வரிகளிலும் விடை எழுதுக.)

1. சுருக்கமான விடைகள் தருக.

1) வேதங்கள் சுருதி என அழைக்கப்படுவதேன்?
2) பிராமணங்கள் கூறும் பொருள் யாது?
3) விஷ்ணு பகவானின் அவதாரங்கள் பற்றிய செய்திகளை முறைப்படுத்திக் கூறும் புராணம் யாது?
4) சாக்த சமயத்தவருக்குரிய தந்திரங்கள் என வழங்கப்படும் ஆகமங்கள் எத்தனை?
5) யோக முறையை முதன்முதல் முறைப்படுத்தியவர் யார்?
6) மீமாம்சை கடவுளரைப் பின்தள்ளி விடுகிறது எனக் கூறுவது பொருந்துமா?
7) பிரபஞ்சம் தோன்றுவதற்குப் பிரகிருதியே முதற்காரணம் எனக் கொள்ளும் தத்துவ வாதம் யாது?
8) அத்துவைதம் பற்றி முதன்முதல் கிட்டக்கூடிய முறையான நூல் யாது?
9) சங்கரரின் காலம் யாது?
10) பிரபத்தி என்னும் வழி எத்தத்துவவாதிகளாற் போதிக்கப்படுகிறது?
11) சைவ தத்துவக் கண்ணோட்டத்தோடு வேதாந்த சூத்திரத்திற்கு விளக்கவுரை எழுதியவரின் பெயர் யாது?
12) மாயை தான் பிரபஞ்சத்தின் முதற் காரணம் எனக் கொள்ளும் தத்துவம் எது?
13) சைவ சித்தாந்திகளின் கருத்துப்படி இவ்வுலகினை அமைக்கும் தத்துவங்கள் எத்தனை?
14) அத்துவைதம் என்பதற்குச் சைவசித்தாந்திகள் கூறும் பொருள் யாது?
15) ஆணவம் உயிரின் குணமாகவா அல்லது குற்றமாகவா கருதப்பட வேண்டும்?
16) உயிரைப் பீடித்த மும்மலங்களுள் முதலில் நீங்குவது யாது?
17) பெற்றான் சாம்பான் யாரால் முத்தியடைந்தான்?
18) ''அங்கே பட்டகட்டையிற் பகற்குருடு போகிறது'' என்பது யார் கூற்று?
19) சதாசிவ சிவாசாரியார் என்பது யாரைக் குறிக்கும்?
20) சாக்தத்தையும் காஷ்மீர சைவத்தையும் ஒன்றுபடுத்தும் முக்கிய போதனை யாது?

(30 புள்ளிகள்)

2. வேதத்தின் முற்பகுதிகள் ஒரு வேள்விச் சமயத்தைப் பற்றியே போதிக்கின்றன. விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

3. உபநிடதங்களில் இந்தியத் தத்துவங்கள், அனைத்தும் ஊற்றெடுக்கின்றன என்பாரின் கருத்துப் பொருத்தமானதோ என்பதை ஆராய்ந்து கூறுக.

4. சைவ சமய வளர்ச்சியில் சிவாகமங்கள் வகிக்கும் முக்கியத்துவத்தினை ஆராய்க (14 புள்ளிகள்)

5. ''இந்து மதத்தவரின் கோட்பாடுகள் அனைத்துக்கும் விளக்கங் கூறும் வகையில் பகவத்கீதை அமைந்திருக்கிறது''. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (14 புள்ளிகள்)

6. மெய்கண்டார் அல்லது அருணந்தி சிவாச்சாரியார் சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

7. மாணிக்கவாசகரின் பத்தி வைராக்கியத்தை அறிந்து கொள்ளத் திருவாசகம் எவ்வாறு உதவுகின்றது என்பதை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

8. சைவ சித்தாந்தங் கூறும் ஆணவ மலத்தின் இயல்பினை விளக்கி எழுதுக (14 புள்ளிகள்)

9. திருமாலின் பெருமையினையும் அவர் எடுத்த அவதாரங்களையும் பற்றி அறிந்து கொள்ள நாலாயிரந்திவ்விய பிரபந்தம் உதவுமாற்றை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஓகஸ்ட் 1988

## (22) இந்துசமயம் II

(முதலாம் வினாவின் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் ஏறத்தாழ 5 வரிகளுக்கு உட்படவும் நீர் தெரிவு செய்யும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஏறத்தாழ 50 - 60 வரிகளிலும் விடை எழுதுக.)

1. சுருக்கமான விடைகள் தருக

1) யோகம் என்னும் சொல்லின் பொருளைத் தெளிவுபடுத்துக? சேர்க்கை
2) காமிய கருமம் எனப்படுவது யாது?
3) 'செயலிலே துறவு', 'செயலைத் துறத்தல்' என்னும் இரு பொருள்களுள் எது கரும யோகம் என்பதற்குப் பொருந்தும்?
4) ஆசாரபத்தி எனப்படுவது யாது?
5) முத்தி இன்பத்தை நுகர்தற்குக் கனி போலத் தோன்றும் மார்க்கம் என நால்வகை மார்க்கங்களுள் எது வருணிக்கப்படுகிறது?
6) நால்வகை மார்க்கங்களுள் குருவை இன்றியமையாது வேண்டுவது எம்மார்க்கம்?
7) நிர்வாண தீட்சைக்கு உரியவர் யார்?
8) இரண்டாந் தீட்சை எனப்படுவது யாது?
9) சிவமயம் என்னுஞ் சொல்லின் பொருள் யாது?
10) பெரிய புராணம் கூறும் 63 நாயன்மார்களுள் குருவை வழிபட்டு உயர்ந்தவர்கள் எத்தனை பேர்?
11) இலிங்கம் என்னும் சொல்லின் பொருள் யாது?
12) பரவொளியாகிய சிதம்பரத்தை சிவலிங்கத்தின் எப்பாகம் குறித்து நிற்கும்?
13) தூலலிங்கம் என்பது எதனைக் குறிக்கும்?
14) தம்மை சிவனடியார்களுடன் சேர்க்குமாறு மாணிக்கவாசகர் இறைவனை வேண்டியதேன்?
15) இந்து ஆலய அமைப்பு எடுத்துக் காட்டும் தத்துவம் யாது?
16) பிராரத்தவினையின் பண்பினை வரையறுத்துக் கூறுக?
17) வருணாச்சிரமம் என்பதன் பொருள் யாது?
18) ''புருஷ சூக்தம்'' கூறும் பொருள் யாது?
19) இந்து சமயக் கோட்பாடுகளின்படி தர்மங்களின் பாதுகாவலன் இல்லறத்தானா சந்நியாசியா?
20) கும்பாபிஷேகம் எனப்படும் பெருஞ்சாந்தி ஆலயங்களில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படும்?

(30 புள்ளிகள்)

2. அப்பர் சுவாமிகளின் வாழ்க்கை நெறி சரியை மார்க்கத்துக்கு எடுத்துக்காட்டாக அமையுமாற்றை ஆராய்ந்து கூறுக. (14 புள்ளிகள்)

3. கருமயோகம் ஒரு தன்னலமற்ற சேவை மார்க்கமென பகவத்கீதை எடுத்துக் காட்டுமாற்றை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

4. உயர்ந்த பக்திக்குக் கண்ணப்பன் கதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக ஆகுமாற்றை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

5. மோட்ச வழியை நாடி நிற்கும் உயிருக்குக் குருவின் இன்றியமையாமையை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

6. ஆலயங்களில் உள்ள திருவுருவங்களில் சிவலிங்கம் உணர்த்தும் தத்துவப் பொருள்களை விளக்கி எழுதுக. (14 புள்ளிகள்)

7. திருத்தொண்டர் புராணங் கூறும் சிவனடியார் பெருமையைச் சுருக்கமாக எழுதுக.

8. வருணாச்சிரம தருமம் என்றால் என்ன என்பதை விளக்கி எழுதி இக்கால மக்கள் வாழ்க்கைக்கு அதன் பொருத்தப்பாட்டை அலசி ஆராய்க. (14 புள்ளிகள்)

9. ''அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை இலட்சியங்களை இந்துக்கள் வகுத்துக் கொண்டதன் நோக்கம் இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் வெற்றி பெறுவதை அடிப்படையாகக் கொண்டேயாகும்'' இக்கூற்றுப் பொருந்துமா என்பதை ஆராய்க. (14 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஓகஸ்ட் 1989

## (22) இந்துசமயம் I

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.

1) வேதங்கள் 'சம்ஹிதை' என்ற பெயர் பெறுவதன் காரணத்தை விளக்குக.
2) இருக்கு வேதம் எத்தனை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
3) இருபத்தெட்டு சைவாகமங்களுள் உருத்திரபேதம் கூறுவன எத்தனை?
4) மகாபுராணங்களுக்குரிய இலக்கணங்கள் எத்தனை? அவற்றைக் குறிப்பிடுக?
5) 'சதபதம்' என்ற பெயர் எதனைச் சுட்டும்? விளக்கம் தருக.
6 உபநிடதங்கள் கூறும் மகாவாக்கியங்களுள் ஒன்றினைக் குறிப்பிடுக? அதன் பொருளைத் தருக.
7) வைணவர்கள் பிரமாணமாகக் கொள்ளும் இரு ஆகமங்களின் பெயர்களைத் தருக.
8) இறந்தபின் ஆன்மாவின் நிலைபற்றி விபரிக்கும் உபநிடதம் யாது?
10) சத்காரியவாதம் பற்றிக் கூறும் இரு தத்துவ முறைகள் யாவை?
11) முக்குணங்கள் என்று குறிக்கப்படுபவை யாவை?
12) சங்கரர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
13) வேதாந்த சூத்திரத்திற்கு வழங்கப்பட்ட மற்றொரு பெயர் யாது?
14) மாண்டூக்கிய காரிகை யாரால் எழுதப்பட்டது?
15) உலகம் பற்றி வேதாந்திகளின் கொள்கை என்ன?
16) மெய்கண்டதேவர் ஆக்கிய சிவஞான போதம் எத்தனை சூத்திரங்களைக் கொண்டது?
17) எட்டாந் திருமுறையாகப் போற்றப்படுபவை யாவை?
18) முதலாழ்வர் மூவரின் பெயர்களைத் தருக?
19) உலகத் தோற்றத்திற்கு முதற்காரணம் நிமித்த காரணம் என எவற்றைச் சைவசித்தாந்திகள் ஏற்றுக் கொள்கின்றனர்?
20) சைவசித்தாந்தத்தில் ஆணவம் சகலமலம் என்ற பெயரினால் குறிக்கப்படுவதன் காரணம் என்ன? (30 புள்ளிகள்)

2. இருக்கு வேதம் கூறும் சமய நெறியின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறுக? (14 புள்ளிகள்)

3. சைவசமயத்தின் முதனூல் என்ற நிலையில் சிவாகமங்கள் பெறும் சிறப்பினை விளக்கி, அவை கூறும் பொருளைச் சுருக்கமாகத் தருக. (14 புள்ளிகள்)

4. இந்து வளர்ச்சிக்கு உபநிடதங்கள் முன்னோடியாக விளங்குமாற்றினை அவை கூறும் தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. 14 புள்ளிகள்)

5. இந்து சமயத்தை வளம்படுத்துவதில் இதிகாசங்கள் கொண்டிருந்த பங்கினை ஆராய்க.

6. இந்து தரிசனங்களின் வரிசையில் இராமாநுசர் நிறுவிய விசிட்டாத்வைதக் கோட்பாட்டின் சிறப்பியல்புகளை ஆராய்க. (14 புள்ளிகள்)

7. அப்பர் சுவாமிகள் அல்லது திருஞானசம்பந்த சுவாமிகள் சைவசமய வளர்ச்சிக்கு எவ்வெவ் வகையிலே தொண்டாற்றினார்கள் என்பதை ஆராய்க. (14 புள்ளிகள்)

8. சைவசித்தாந்த சாத்திரங்கள் பதி பற்றிக் கூறும் கருத்துக்களை விபரிக்குக. (14 புள்ளிகள்)

9. ஆழ்வார்களின் தொண்டினால் தென்னாட்டிலே வைணவம் வளம்பெற்றவாற்றை ஆராய்க.

10. சமய நூல் என்ற நிலையில் சச்சியப்பரின் கந்தபுராணத்தின் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறி, அது போதிக்கும் அறிவுரைகளைச் சுருக்கமாகத் தருக. (14 புள்ளிகள்)

11. இந்துக்களின் ஆன்மீக வாழ்க்கையில் கர்மக் கோட்பாடு பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஒகஸ்ட் 1989

## (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.
   1) சிவசின்னங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   2) சைவசமயத்தில் விசேட தீட்சை பெற்றவன் எவ்வெவற்றுக்கு அதிகாரியாக விளங்குவான்?
   3) 'குருலிங்க சங்கமம்' என்ற தொடரில் சங்கமம் என்பது எதனைக் குறிக்கும்?
   4) மகாசிவராத்திரி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
   5) மூவகை ஆன்மாக்கள் எவை?
   6) நாயன்மார்களுள் சிவனடியாரை வழிபட்டு வீட்டின்பம் அடைந்தோர் எத்தனை பேர் என்பதைக் குறிப்பிட்டு அவர்களுள் மூவரின் பெயர்களைத் தருக.
   7) வேதங்களில் கருமக் கொள்கையின் முன்னோடிக்கு வழங்கப்பட்டுள்ள பெயர் யாது?
   8) சஞ்சித கருமம் என்றால் என்ன?
   9) இறைவனது திருமேனிகளில் 'சதாசிவம்' எத்திருமேனியைக் குறித்து நிற்கின்றது?
   10) 'நகராதி' பஞ்சாட்சரம் எனச் சுட்டப்படுவது யாது?
   11) திருக்கோயிலில் நைமித்திக காலங்களில் நிகழும் பூசையின் போது இறைவனுக்கு வழங்கப்படும் உபசாரங்கள் எத்தனை வகையின?
   12) நான்கு வர்ணங்களைப் பற்றிக் குறிப்பிடும் வேதப் பாடல் யாது?
   13) சிவாகமங்களில் உள்ள நான்கு பாதங்களில் கோயிற் கிரியைகளைப்பற்றி கூறும் பாதம் யாது?
   14) பிரபத்தி எனப்படுவது யாது?
   15) கிரியை தான் ஞானநெறிக்கு வழிகாட்டியாக உள்ளது எனக் கூறுவது பொருந்துமா?
   16) சிவாலயங்களில் நைமித்திகக் கிரியையின் பின்னர் பிராயச்சித்தம் என்னும் கிரியை இன்றியமையாது இடம் பெறுவதற்குரிய காரணம் என்ன?
   17) இறைவன் மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்று நிலைகளில் விளங்கும் நோக்கம் யாது?
   18) அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களுள் 'பரம்புருஷார்த்தம் எனக் குறிக்கப்படுவது யாது?
   19) 'சுயம்பு லிங்கம்' எனப்படுவது யாது?
   20) 'குருதசஷிணை' வழங்கப்படுவதன் நோக்கம் யாது? (30 புள்ளிகள்)

2. உயர் இலட்சியமாகிய முத்தியையடைவதற்குரிய வழிவகை பற்றியும், ஆன்மா பக்குவப்படுதல் பற்றியும் சைவசித்தாந்தம் கூறுவனவற்றை விளக்குக. (14 புள்ளிகள்)

3. பகவத்கீதை கருமயோகத்தின் வழியாக எடுத்துக்கூறும் ஆன்மீக அறிவுரைகளை விபரிக்குக. (14 புள்ளிகள்)

4. இந்து சமயத்திலே குருதத்துவம் பெறும் சிறப்பினை எடுத்துக் கூறுக. (14 புள்ளிகள்)

5. ''நான்கு புருடார்த்தங்களும் இந்துக்களின் வாழ்க்கையைச் செம்மையுறச் செய்து, ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதையே உயர் நோக்கமாகக் கொண்டவை'', ஆராய்க. (14 புள்ளிகள்)

6. ஆலய வழிபாடு இந்துக்களிடையே இன்றியமையாதவாறு முக்கியத்துவம் பெறுமாற்றினை விளக்கி, அதன் சிறப்பியல்புகளை ஆராய்க. (14 புள்ளிகள்)

7. இந்து சமய வளர்ச்சிக்கு வர்ணாச்சிரம தர்மங்கள் எவ்வளவிற்கு உதவின என்பதனை ஆராய்க. (14 புள்ளிகள்)

8. ''அடியார் மேல் அன்புடையாதல்'' என்ற அன்புநெறியை அடிப்படையாகக் கொண்டதே சிவனடியார் வழிபாடு' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (14 புள்ளிகள்)

9. சிவலிங்க வழிபாட்டின் பெருமையையும் தொன்மையையும் எடுத்துக் கூறுக. (14 புள்ளிகள்)

10. ''ஒழுக்கம் இந்து சமயத்தின் அடிப்படையான கோட்பாடுகளில் ஒன்று'' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (14 புள்ளிகள்)

11. இந்து சமயத்தில் அறம் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (14 புள்ளிகள்)

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

## ஓகஸ்ட் 1990

# (22) இந்துசமயம் I

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக
மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக

1) இருக்கு வேதத்தில் உள்ள 'புருஷ சூத்தம்'' என்னும் பாடலின் முக்கியத்துவம் யாது?
2) வேதங்களில் அதிகமான பாடல்களினால் போற்றப்படும் தெய்வம் யாது?
3) தத்துவமசி என்றால் என்ன? அதன் பொருளை தருக?
4) பிராமணங்கள் கூறும் முதன்மைத் தெய்வம் யாது?
5) இறந்த பின் ஆன்மாக்களின் நிலை என்ன? என யமனிடம் சென்று வினாவியவன் பெயர் என்ன?
6) இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தின் ஆசிரியர் யார்?
7) பிரஸ்தான திரயம் என்பதிலடங்கும் நூல்கள் யாவை?
8) திருக்கோயில் கிரிகைகளை சிவாகமங்கள் வகுத்துக் கூறுமாற்றை எடுத்துக் கூறுக?
9) தர்மம் தலை காக்கும் என்னும் இந்துக் கோட்பாட்டை விளக்குக.
10) பதினெண் புராணங்களின் மூன்றின் பெயரைத் தருக.
11) பத்தாம் திருமுறை என போற்றப்படுவது யாது? அதன் ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுக.
12) சித்திக்கு மேல் நூல் இல்லை என்பது எதனைச் சுட்டும்?
13) ஐவகை வேள்விகள் எவை?
14) காஷ்மீர் சைவத்தின் மூல நூல் யாது?
15) தர்ம சாஸ்திரங்களின் முக்கிய நோக்கங்களில் இரண்டைக் குறிப்பிடுக.
16) பிரபத்தி, சரணாகதி ஆகியவற்றை பிரதான அம்சங்களாக கருதும் சமயநெறி யாது?
17) திருவாய் மொழியை பாடியவர் யார்?
18) பிரளாயகலர் எனப்படுவோர் யார்?
19. தாடலை என்றால் என்ன? எந்த தத்துவ மரபில் இது முக்கியத்துவம் பெறுகின்றது?
20) சைவத்தின் இரு கண்கள் என போற்றப்படும் இரு தமிழ்ப் புராணங்கள் யாவை?

(30 புள்ளிகள்)

2. இந்து சமயத்தின் முதல் நூல் என்ற நிலையில் வேதங்களின் சிறப்பியல்புகளைக் கூறுக.
(14 புள்ளிகள்)

3. வேதாந்த தத்துவ கோட்பாடுகள் அனைத்தும் உபநிஷதங்களிலேயே ஊறறெடுத்துள்ளன இக்கூற்று பொருந்துமோ என ஆராய்க.
(14 புள்ளிகள்)

4. சைவசமய மரபில் சிவாகமங்களுக்குரிய இடத்தினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

5. பகவத்கீதை ஒரு சமய நூலாக மட்டுமன்றி இந்துக்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் அற நூலாகவும் விளங்குகின்றது. இக்கூற்றினைக் கருத்திற் கொண்டு பகவத்கீதையின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறுக.
(14 புள்ளிகள்)

6. சித்தாந்த சாஸ்திர வரிசையில் திருவருட் பயனின் இடத்தினை அதன் பொருளின் அடிப்படையில் விளக்கிக் காட்டுக.
(14 புள்ளிகள்)

7. பெரியாழ்வார் அல்லது நம்மாழ்வார் வைணவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை விபரித்துக் கூறுக.
(14 புள்ளிகள்

8. திருமுறைகளுள் முதன்மை பெறும் தேவாரம், திருவாசகங்கள் சைவ மரபின் கருவூலமாக திகழுமாற்றை ஆதாரம் காட்டி விளக்குக
(14 புள்ளிகள்)

9. சோழர் காலத்தில் தென்னாட்டில் சைவசமயமும் தத்துவமும் சிறப்படைந்த வரலாற்றை விளக்கிக் காட்டுக?
(14 புள்ளிகள்)

10. இந்து சமயத்தின் கர்மக் கோட்பாடு பற்றி முக்கிய அம்சங்களை ஆராய்க. (14 புள்ளிகள்)

11. பல்லவர் காலத்திலே சைவ சமயத்தவரின் வாழ்க்கையிற் கோவில்கள் பெற்றிருந்த இடத்தினை ஆராய்க.
(14 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

**ஓகஸ்ட் 1990**

# (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.
   1. சைவசித்தாந்தம் என்ற பெயரை முதன் முதலில் கூறியவர் யார்?
   2) சைவசமயிகளின் ஆதார தத்துவங்களுள் திருவண்ணாமலை எதனைச் சுட்டுகின்றது?
   3) சிவ சின்னமாகிய திருநீற்றை எவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டும்?
   4) திருநீற்றை தரிக்கும் இரு முறைகள் யாவை?
   5 உருத்திராட்சத்தை எவ்எவ் காலங்களில் தரிப்பது உத்தமம்?
   6) திருக்கோவிலில் சுத்தமாக்கப்பட்ட ஆன்மாவை குறித்து நிற்பது எது?
   7) கொடிமரத்திலே சீலை சுற்றியிருப்பதன் தத்துவம் என்ன?
   8) கந்த சஷ்டி விரதம் எப்பெயது அனுஷ்டிக்கப்படுகிறது?
   9) சிவாலயத் தொண்டுகளில் மூன்றினைக் குறிப்பிடுக?
   10) பரார்த்த லிங்கம் எனக் குறிக்கப்படுவது யாது?
   11) சரியை வழிபாடுயியற்றுபவர்கள் பெறும் முத்தி யாது?
   12) நால்வகை ஆச்சிரமங்களில் மாணவராக இருந்து கல்வி கற்கும் ஆச்சிரமம் எது?
   13) அப்பர் சுவாமிகளின் குருபூசை தினம் யாது
   14) விரதம் என்றால் என்ன? விளக்குக?
   15) ''குரு'' என்ற சொல் தரும் பொருள் யாது?
   16) கிரியையில் ஈடுபடும் ஒருவன் கையில் தர்ப்பைப் புல்லினால் பவித்திரம் அணிவதன் நோக்கம் என்ன?
   17) இறைவழிபாட்டின் ஆவாகணம் குறிக்கும் பொருள் யாது?
   18) பண்சாட்சரத்தின் சிறப்பினைக் கூறுக?
   19) ''ராஜயோகம்'' என்றால் என்ன?
   20) நடராசர் வடிவம் காட்டும் பொருள் யாது?

(30 புள்ளிகள்)

2. சைவநாற்பாதம் அனுஷ்டிக்கும் முறையினை சுருக்கமாக தந்து அவற்றுள் சரியை மார்க்கத்துக்கு எடுத்துக் காட்டாக அப்பர் சுவாமிகளின் வாழ்க்கை நெறி அமையுமாற்றை ஆராய்ந்து கூறுக. (14 புள்ளிகள்)
3. வர்ணாச்சிரம தர்மம் எனப்படுவது யாது? இதைத் தர்மக் கோட்பாடுகள் பழைமையை உள்ளவாறே பாதுகாப்பதையே நோக்கமாக கொண்டவை எனக் கூறுவது பொருத்தமோ என ஆராய்க. (14 புள்ளிகள்)
4. புருடார்த்தங்களின் முக்கிய நோக்கம் இம்மை - மறுமை ஆகிய இரண்டிலும் மனிதனை வெற்றி பெறுச் செய்வதே ஆகும் கூற்றினை ஆராய்க. (14 புள்ளிகள்)
5. இந்துக்களின் சமய வாழ்க்கை மேன்மை அடைவதற்கு இந்து சமய நூல்களில் குறிப்பாக உப நிஷதங்கள், திருக்குறள் போன்றவை வற்புறுத்திக் கூறும் ஒழுக்கங்கள் பற்றி ஆராய்க. (14 புள்ளிகள்)
6. சங்கம வழிபாட்டின் சிறப்பினையும் பெருமையையும் நாயன்மாரோடு தொடர்புபடுத்திக் கூறுக. (14 புள்ளிகள்)
7. முத்திநிலை பற்றி சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்களை வேதாந்தம் அது பற்றிக் கூறும் கருத்துக்களோடு தொடர்புபடுத்தி ஆராய்க (14 புள்ளிகள்)
8. திருக்கோயில்களில் காலத்திற்குக் காலம் நிகழும் கும்பாபிஷேகத்தின் மகிமையையும் அது குறித்து நிற்கும் தத்துவத்தையும் விளக்கிக் காட்டுக (14 புள்ளிகள்)
9. சைவ சாதனைகளுள் ஞான மார்க்கத்திற்கு எடுத்துக் காட்டாக மாணிக்கவாசகரின் வாழ்க்கை நெறி அமையுமாற்றை விளக்கிக் காட்டுக; (14 புள்ளிகள்)
10. சிவலிங்க வழிபாட்டின் பெருமையையும் தொன்மையையும் எடுத்துக் கூறுக. (14 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஓகஸ்ட் 1990 (விசேட 1991)

## (22) இந்துசமயம் I

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.
   1) இருக்கு வேதத்திற் பக்தி பற்றிய ஆரம்பக் கருத்து எந்தத் தெய்வத்திற்குரிய பாடலிற் காணப் படுகின்றது?
   2) வேத மந்திரங்களின் தொகுப்பு எப்பெயர் பெறும்?
   3) 'வேதசிரசு' என்பது யாது?
   4) இதிகாசம் என்ற சொல்லின் பொருளை விளக்குக.
   5) யசுர் வேதத்தில் வரும் 'சதருத்திரியம்' என்ற பகுதியில் யாது கூறப்பட்டுள்ளது?
   6) 'ஐதரேயம்' என்னும் பெயர் எதனைச் சுட்டும்?
   7) வைதிக சைவம் என்பதனை விளக்குக.
   8) சைவசித்தாந்தக் கருத்துக்களை இருப்பிடமாகக் கொண்ட உபநிடதத்தின் பெயரைத் தருக.
   9) கூர்ம, மத்ஸ்ய என்னும் இரு மகாபுராணங்கள் எச்சமயத்தைச் சார்ந்தவை?
   10) பகவத்கீதையின்படி அவதாரம் நிகழ்வதன் முக்கிய நோக்கம் யாது?
   11) இலிங்காயதம் என்பதன் மறுபெயர் யாது?
   12) யோகசூத்திரத்தின் ஆசிரியர் யார்?
   13) மெய்கண்ட தேவரின் சிவஞானபோதம் எத்தனை சூத்திரங்களைக் கொண்டது?
   14) மீமாம்ஸை தத்துவமுறைமையின் முக்கிய குறிக்கோள் யாது?
   15) திருப்பல்லாண்டு பாடிய திருமுறை ஆசிரியர் யார்?
   16) உலகத் தோற்றத்திற்கு முதற் காரணம் நிமித்த காரணம் என எவற்றைச் சைவசித்தாந்திகள் ஏற்றுக் கொள்கின்றனர்?
   17) அடியார் பத்தியைப் போற்றிப் பேணும் சைவத் தமிழ் புராணம் யாது?
   18) இராமானுஜர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய விரிவுரையின் பெயர் யாது?
   19) சைவசித்தாந்தத்தில் ஆணவம் சகசமலம் என்ற பெயரினால் குறிக்கப்படுவதன் காரணம் என்ன?
   20) பதினோராந் திருமுறையில் எத்தனை மெய்யடியார்களின் பாடல்கள் அடங்கியுள்ளன?

   (30 புள்ளிகள்)

2. நால் வேதங்கள் கூறும் பொருளைச் சுருக்கமாக விளக்கி, இந்து சமய வாழ்க்கைக்கு அவை எவ்வாறு உதவின என்பதை ஆராய்ந்து கூறுக. (14 புள்ளிகள்)
3. சைவாகமங்களின் உட்பிரிவுகளைச் சுருக்கமாக விளக்கி சித்தாந்த நெறியில் அவை பெறும் இடத்தினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)
4. உபநிடதங்களிற் பிரமம் பற்றி விளக்கப்பட்டிருக்குமாற்றை ஆராய்ந்து கூறுக. (14 புள்ளிகள்)
5. இந்து சமயத்தில் ஆணவக் கோட்பாடு பற்றிய முக்கிய அம்சங்களை ஆராய்க. (14 புள்ளிகள்)
6. சோழர் காலத்திலே சைவ சமயத்தவரின் வாழ்க்கையிற் கோயில்கள் வகித்த முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)
7. சித்தாந்த சாத்திர வரிசையில் சிவஞான போதத்தின் பெருமையை விளக்கிக் காட்டுக? 14 புள்ளிகள்)
8. திருஞானசம்பந்தர் அல்லது திருநாவுக்கரசர் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை விபரிக்குக. (14 புள்ளிகள்)
9. இராமானுஷர் நிறுவிய விசிட்டாத்வைதக் கோட்பாட்டின் அடிப்படை அம்சங்களைக் கூறி, அவர் எவ்வெவ் நிலைகளில் அத்வைதத்தை நிறுவிய சங்கரரிலிருந்து வேறுபடுகின்றார் என்பதை விளக்குக. (14 புள்ளிகள்)
10. நம்பியாண்டார் நம்பி அல்லது சேக்கிழார் பெருமான் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)
11. இந்துமதத்தவரின் கோட்பாடுகள் அனைத்துக்கும் விளக்கம் கூறும் வகையில் பகவத்கீதை அமைந்திருக்கின்றது. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (14 புள்ளிகள்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

## ஒகஸ்ட் 1990 (விசேட 1991)

## (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.

1) சைவசமயத்தவனொருவன் முக்தியடைவதற்குக் குருவின் வழிகாட்டல் இன்றியமையாததா?
2) தீட்சை வகையினுள் 'நிராதாரம்' என்பதனை விளக்குக.
3) 'விபூதி' என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குக.
4) இந்து ஆலய அமைப்பு எடுத்துக்காட்டும் தத்துவம் யாது?
5 'இட்டலிங்கம்' என்று குறிக்கப்படுவது யாது?
5) 'சிகராதி பஞ்சாட்சரம்' எனச் சுட்டப்படுவது யாது?
7) வேதங்களில் கருமக் கொள்கையின் முன்னோடியாகக் காணப்படும் பெயர் யாது?
8) இந்து சமுதாயம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல் பற்றிக் குறிப்பிடும் இருக்குவேதப் பாடல் யாது?
9) இல்லறத்தான் முக்கியமாகச் செய்யவேண்டிய ஐந்து வேள்விகள் யாவை?
10) சிவவிரதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
11) திருக்கோயிலில் நைமித்திக காலங்களில் நிகழும் பூசையின்போது இறைவனுக்கு வழங்கப்படும் உபசாரங்கள் எத்தனை வகையின? 16.
12) 'பஞ்ச கவ்வியம்' என்றால் என்ன?
13) 'குருலிங்க சங்கமம்' என்ற தொடரில் சங்கமம் என்பது எதனைக் குறிக்கும்?
14) வைணவ சமயத்தினர் கருதும் மோட்சநிலை எத்தகையது?
15) சைவசித்தாந்தத்தில் சகலாவத்தை எதைக் குறிக்கிறது?
16) 'சஞ்சிதம்' எனப்படுவது யாது?
17) கிரியை வழிபாடியற்றுபவர்கள் பெறும் முக்தி யாது?
18) குருதட்சணை வழங்கப்படுவதன் நோக்கம் யாது?
19) கிரியைதான் ஞானநெறிக்கு வழிகாட்டியாக உள்ளது எனக் கூறுவது பொருந்துமா?
20) திருக்கோயில்களில் நைமித்திகக் கிரியைகள் ஏன் செய்யப்படுகின்றன? (30 புள்ளிகள்)

2. முக்திக்கு வழிவகுக்கும் சிவாலயத் திருத்தொண்டுகள் யாவை? அத்தொண்டினை ஆற்றி பேரின்பம் அடைந்த மெய்யடியார்களின் வரலாற்றோடு தொடர்புபடுத்தி அவற்றின் சிறப்பியல்புகளைக் கூறுக. (14 புள்ளிகள்)

3. பக்தி யோகமாவது யாது? பகவத்கீதையில் அது எவ்வாறு கரும யோகத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளதென்பதை ஆராய்க. (14 புள்ளிகள்)

4. ''மனித இலட்சியங்கள் அல்லது புருடார்த்தங்கள் என்ற ஒரு திட்டம் இந்து சமயத்திலே இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் வெற்றி பெறுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டே வகுக்கப்பட்டுள்ளது.'' இக்கூற்று பொருந்துமோ என ஆராய்க. (14 புள்ளிகள்)

5. சைவ சாதனைகளுள் யோக மார்க்கத்திற்கு எடுத்துக்காட்டாக சுந்தரர் வாழ்க்கை நெறி அமையுமாற்றை விளக்கிக் காட்டுக. (14 புள்ளிகள்)

6. ''இந்துக்களின் சமய வாழ்க்கைக்கு ஒழுக்கமே அடிப்படை'' இந்து சமய நூல்கள் ஒழுக்கம் பற்றித் தரும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க. (14 புள்ளிகள்

7. வருணாச்சிரம தருமக் கோட்பாடுகள் இன்றைய சூழல்களிலே பொருத்தமற்றவை எனல் பொருந்துமோ என்பதை ஆராய்க. (14 புள்ளிகள்)

8. திருக்கோயில் வழிபாடு இந்துக்களிடையே சிறப்புப் பெறுமாற்றினை எடுத்துக் விளக்குக. (14 புள்ளிகள்)

9. ''ஆன்மீக வாழ்க்கைக்கு குருவினது வழிகாட்டல் இன்றியமையாதது" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு குருவழிபாடு இந்து சமயத்தில் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க.

10) நம்பியாண்டார் நம்பி அல்லது சேக்கிழார் பெருமான் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

11) ''இந்துமதக்தவரின் கோட்பாடுகள் அனைத்துக்கும் விளக்கம் கூறும் வகையில் பகவத்கீதை அமைந்திருக்கின்றது.'' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (14 புள்ளிகள்)

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஒகஸ்ட் 1991

## (22) இந்துசமயம் I

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.

1) வேதங்கள் 'அபௌருஷேயம்' என்ற அடைமொழியினால் சுட்டப்படுவதன் காரணம் யாது? விளக்குக.
2) வேதகாலத்தில் நிலவிய முக்கிய வழிபாட்டு முறை யாது?
3) 'சங்கம வழிபாடு' என்பது எதனைக் குறிக்கும்?
4) காயத்திரி மந்திரம் அப்பெயர்பெற்ற காரணம் யாது,
5 'உபநிடதம்' என்ற சொல்லின் பொருளைத் தருக.
6) இறைவன் அவதாரம் எடுப்பதன் நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
7) மகாபாரதம் இந்துசமயஞ் சார்ந்த ஒரு கலைக்களஞ்சியம் எனச் சுட்டப்படுவதேன்?
8) பகவத்கீதையை ஓர் உபநிடதம் என்று கூறுவது பொருந்துமா?
9) ஆழ்வார்களில் தலைசிறந்தவர் எனப் போற்றப்படுபவர் யார்? அவர் அருளிய பாடல்களின் பெயரைத் தருக.
10) வேதங்கள் தேவாரமாதல்போல உபநிடதங்கள் எவ்வாறாயின?
11) ஆகமம் என்ற சொல்லின் பொருளை விளக்குக.
12) ஆகமங்களின் பொருளைத் தமிழில் தந்த முதல் நூல் யாது? அதன் ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுக.
13) மெய்கண்டார் எந்த நூற்றாண்டில் சிவஞான போதம் என்ற நூலை இயற்றினார்?
14) பதினெண் புராணங்களில் சிவபுராணங்கள் எனக் குறிக்கப்படுபவை எத்தனை?
15) பகவத்கீதை 'யோகம்' என்ற சொல்லுக்கு தரும் இரு விளக்கங்களைக் குறிப்பிடுக.
16) சைவசித்தாந்தம் கடவுள் உண்டு என்பதை எவ்வாறு நிரூபிக்க முயல்கின்றது?
17) ஆலயங்களில் ஓதப்படும் பஞ்சபுராணங்கள் யாவை?
18) ஆன்மாக்கள் இறைவனால் படைக்கப்பட்டவை எனக் கூறுவது சைவசித்தாந்தக் கொள்கைக்குப் பொருந்துமா?
19) சைவசித்தாந்தத்தில் வழங்கப்படும் 'சத்திநிபாதம்' என்ற சொல்லின் பொருளை விளக்குக.
20) வைணவ சமயத்தில் மரபுவழியாக வழிபாட்டிற்கெனக் கைக்கொள்ளப்படும் இரு முறைகள் யாவை?

2. வேதங்கள் வெளிப்படுத்தும் வழிபாட்டு முறைகளை வகுத்துக் காட்டுக.
3. ''திருக்கோயில் வழிபாட்டின் நெறிமுறைகளை வகுத்துக் கூறும் பிரமாண நூல்களே சிவாகமங்கள்''. ஆராய்க
4. உபநிடதங்களில் பிரமம் பற்றி விளக்கப்பட்டிருக்குமாற்றை ஆராய்ந்து கூறுக.
5. இந்து ஒருவரினது ஆன்மீக வாழ்க்கை மேன்மையுறுவதற்கு கர்மயோகத்தின் வழி பகவத்கீதை தரும் உபதேசங்கள் யாவை?
6. இந்து சமயத்தை வளம்படுத்துவதில் புராணங்கள் எத்தகைய பங்கினைக் கொண்டு விளங்குகின்றன என்பதை மதிப்பிடுக.
7. இந்து தத்துவத் துறையின் வளர்ச்சிக்கு சங்கரரின் பங்களிப்பு எத்தகையது என்பதை ஆராய்க.
8. சித்தாந்த சாத்திர வரிசையில் சிவஞான சித்தியார் வகிக்கும் இடத்தினை ஆராய்க.
9. அப்பர் சுவாமிகளது சமயத்தொண்டினால் சைவ சமயம் வளமுற்றவாற்றை உதாரணங்காட்டி விளக்குக.
10. பன்னிரு திருமுறைகளும் அவற்றின் தொகுப்பும் பற்றிச் சுருக்கமாக கூறுக.
11. வைணவ ஆழ்வார்களில் ஒருவரைத் தெரிந்து அவர் பாடிய பிரபந்தத்தில் பக்தி வைராக்கியம் புலப்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்கிக் கூறுக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஒகஸ்ட் 1991

## (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

1. சுருக்கமான விடைகள் தருக.
   1) விநாயகரைத் தொழுது பேறுபெற்ற அடியவர்களில் இருவரைக் குறிப்பிடுக.
   2) ஆன்மாக்கள் பிறந்து இறந்து உழலும் பிறப்புக்கள் யாவை?
   3) ஆன்மார்த்த லிங்கம் என்றால் என்ன?
   4) சிவ மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை செபிப்பதற்கு உரிய தகைமை பெற்றோர் யாவர்?
   5 கிரியையின் போது தர்ப்பையினாலான பவித்திரத்தைக் குரு வழங்க, அதனை அணிவதன் நோக்கம் யாது;
   6) திருக்கோயிலில் கருவறையில் உள்ள சிவலிங்கத்தை நோக்கிய வண்ணம் உள்ள நந்தி எதனைக் குறித்து நிற்கின்றது?
   7) 'பிரதிஷ்டை' என்ற சொல் குறிக்கும் பொருள் யாது?
   8) திருவிழாக்களைக் காணுவதால் கிடைக்கும் தீட்சையின் பெயர் யாது?
   9) சைவசித்தாந்தம் கூறும் மூவகை வினைகள் யாவை?
   10) 'பட்டகட்டையில் பகற்குருடு ஏகுதல் பாரீர்' என்பது யார் கூற்று?
   11) சைவசமயிகள் வழிபடும் பஞ்சபூதத் தலங்களில் ஒன்றாகிய திருவானைக்கா எதனைச் சுட்டி நிற்கிறது?
   12) வைணவ ஆகமங்கள் யாவை?
   13 இந்து சமய மரபில் கருமக் கொள்கைக்கு உரிய மூலக்கருத்து எங்கு காணப்படுகின்றது?
   14) சிவனை நினைந்து விரதமிருக்கும் நாட்கள் எவை?
   15) குருவை வழிபாடு செய்து முத்தியடைந்த நாயன்மார்கள் எத்தனை பேர்?
   16) கிரியை ஞானநெறிக்கு வழிகாட்டியாக உள்ளது எனக் கூறுவது பொருந்துமா?
   17) சிவபூசை செய்கின்றவர்கள் கழுத்தில் உருத்திராக்கம் அணிவது அவசியமா?
   18) ஆலயத்தின் தலைவாயிலில் அமையும் கோபுரத்திற்குரிய மறுபெயர் யாது?
   19) சரியை வழிபாடு என்றால் என்ன? அதனால் அடையும் முத்தி யாது?
   20) அதர்வ வேதம் குறிப்பிடும் சமய நம்பிக்கைகளில் சிலவற்றைத் தருக.
2. முத்தி பற்றிச் சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி, அதனை அடைவதற்கான வழிமுறைகளை விபரிக்குக.
3. இராமானுசரது விசிட்டாத்துவைதத்திற்கும் சைவசித்தாந்தத்திற்குமிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தெளிவுபடுத்துக.
4. இந்துசமய இலக்கியங்களில் பகவத்கீதை பெறும் இடத்தினை மதிப்பிடுக.
5. "இந்துக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் கோட்பாடுகளில் ஆச்சிரம தர்மங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை" கருத்துரை வழங்குக.
6. தீட்சையின் வகைகளை விளக்கி, முத்தியடைய விழையும் உயிர்களுக்கு அவை துணைபுரியுமாற்றை விளக்குக.
7. ஆலயத்தின் அமைப்பினை விளக்கி, பல்வேறு நிலைகளில் அவை சுட்டும் தத்துவப் பொருளைச் சுருக்கமாகக் கூறுக.
8. இந்து சமய நூல்களின் துணைக்கொண்டு அறம் பற்றியும் சமூக வாழ்க்கையில் அது பெறும் முக்கியத்துவம் பற்றியும் விபரிக்க.
9. சிவனுக்குரிய திருவுருவங்களில் ஒன்றினைத் தெரிந்து, அதன் அமைப்பையும் தத்துவத்தையும் எடுத்துக் கூறுக.
10. சைவசமய வழிபாட்டில் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரம் பெறும் இடத்தினையும் அதன் பெருமையையும் கூறுக.
11. இந்துக்களின் கருமக் கோட்பாட்டினை விளக்கி, அதற்கும் மறுபிறப்புக் கோட்பாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்புகளை ஆராய்க.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஒகஸ்ட் 1991 (விசேட 1992)

## (22) இந்துசமயம் I

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் அறு வினாக்களுக்கு விடைகள் தருக.

முதலாம் வினாவுக்கு 30 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்குப் 14 புள்ளிகளும் வழங்கப்படும.

1. சுருக்கமான விடைகள் தருக
   1) அதர்வ வேத மந்திரங்களின் முக்கிய நோக்கங்கள் யாவை?
   2) ''சத்தியமான (உண்மையான) பொருள் ஒன்றே; அதனையே அறிஞர் பலவாறு கூறுவர்'' என்ற கூற்று வேதகாலச் சமயநிலைக்குப் பொருந்துமா?
   3) பதினான்கு சைவசித்தாந்த நூல்களை மெய்கண்ட சாத்திரங்கள் எனக்கூறும் மரபு ஏற்பட்டமைக்கான காரணம் யாது?
   4 யசுர் வேதம் எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
   5) 'வேதாங்கங்கள்' என்றால் என்ன?
   6) 'தரிசனம்' என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குக.
   7) 'சதபதம்' என்ற பெயர் எதனைச் சுட்டும்?
   8) இறப்பிற்குப் பின் உயிரின் (ஆன்மாவின்) நிலைபற்றிக் கூறும் முக்கிய உபநிடதம் யாது?
   9) பதினெண் புராணங்கள் தோற்றம் பெறுவதற்குரிய முக்கிய நோக்கம் யாது
   10) சிவாகமங்களில் கிரியாபாதம் என்ற பிரிவு கூறும் விடயங்களைக் குறிப்பிடுக.
   11) முதலாழ்வார்கள் என்று போற்றப்படுபவர்களின் பெயர்களைத் தருக.
   12) பகவத்கீதை தரும் ஞக்கிய உபதேசம் யாது?
   13) 'திருமுறை' என்ற பெயர் வந்த காரணம் யாது?
   14) திருமுறை தொகுத்தருளிய நம்பியாண்டார் நம்பிக்குத் திருவருள் புரிந்த விநாயகப் பெருமானின் திருநாமத்தைக் குறிப்பிடுக.
   15) திருஞானசம்பந்த சுவாமிகள் வாழ்ந்த காலம் யாது?
   16) அப்பரது தேவாரங்கள் எத்தனை திருமுறைகளாக வழக்கப்பட்டுள்ளன? அவை யாவை?
   17) ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்பது யாருடைய கூற்று?
   18) திருமந்திர நூலில் அடங்கியுள்ள பகுதிகள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன? அவற்றின் எண்ணிக்கை யாது?
   19) 'பசுவினை' என்றால் என்ன?
   20) 'இருண்மலம்' என்பது எதைக் குறித்து நிற்கின்றது?
2. இருக்கு வேதம் கூறும் தெய்வ வழிபாட்டு முறைகளைச் சுருக்கமாக குறிப்பிட்டு அக்காலத்தில் நிலவிய சமயக் கோட்பாடுகளை அறிந்துகொள்ள அவை உதவுமாற்றை ஆராய்க.
3. ''சிவாகமங்கள் கூறும் கோயிலமைப்பு, வழிபாட்டு முறை ஆகியவை உயர்ந்த தத்துவ விளக்கங்களைக் கொண்டுள்ளன'' இக்கூற்றினை உதாரணம் தந்து விளக்குக.
4. இந்து தத்துவ ஞானத்தின் கருவூலம் என்ற நிலையில் உபநிடதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.
5. இந்துக்களின் ஆன்மீக வாழ்க்கைக்குரிய வழிகாட்டியாக மட்டுமன்றி உபநிடத சிந்தனைகளுக்கு விளக்கந் தரும் உபநிடதமாகவும் பகவத்கீதை விளக்குஞ் சிறப்பை விளக்குக.
6. மெய்கண்டார் அல்லது அருணந்தி சிவாசாரியார் சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக.
7. சைவசமய வளர்ச்சியில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சமயப்பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுக.
8. திருமாலின் பெருமையினையும் அவரது அவதார மகிமைகளையும் அறிந்து கொள்ள நாலாயிரத் திவ்விய பிரபந்தம் உதவுமாற்றை விளக்கி எழுதுக.
9. உலகம் பற்றிச் சங்கர வேதாந்தமும் சைவசித்தாந்தமும் கூறும் கருத்துக்களை ஒப்பிட்டாராய்க.
10. இந்து சமயத்தின் கர்மக்கோட்பாடு பற்றிய முக்கிய அம்சங்களை எடுத்துக் கூறுக.
11. இந்து சமயத்தில் கௌமாரநெறி பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஒகஸ்ட் 1991 (விசேட 1992)

## (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

முதலாம் வினாவுக்கு 30 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.

1. சுருக்கமான விடைகள் தருக
   1) 'சைவம்' என்ற சொல் குறிக்கும் பொருள் யாது?
   2) பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் நித்தியமானவை எனக்கூறுவது சைவசித்தாந்தக் கொள்கைக்குப் பொருந்துமா?
   3) பதியாகிய சிவத்தின் நிலைகள் எத்தனை? அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
   4) உருத்திரன் என்ற நிலையில் நின்று சிவபெருமான் ஆற்றும் தொழில் யாது?
   5) இறைவன் இயற்றும் ஐந்தொழில்களின் நோக்கம் யாது?
   6) 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை முதன்முதலாகக் குறிப்பிடும் வேதம் எது?
   7) வைசித்தாந்தத்தில் உயிர்கள் உடலோடு கூடியிருக்கும் நிலைக்கு வழங்கப்படும் பெயர் யாது?
   8) சிவசின்னமாகிய வீபூதியை அணியும் வகைகள் யாவை?
   9) 'விரதம்' என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குக.
   10) அக்கினி காரியம்' என்னும் கிரியை பற்றிக் கூறுக.
   11) ஆலயங்களில் இடம்பெறும் கும்பாபிஷேகத்தின் முக்கியத்துவம் யாது?
   12) குருசீடமரபில் வந்த சந்தான குரவர் நால்வரின் பெயர்களைத் தருக.
   13) 'மகா நவமி' பற்றி விளக்கந் தருக.
   14) 'அட்ட வீரட்டங்கள்' என்றால் என்ன?
   15) வேதகாலத்தில் இடம்பெற்ற யாகங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.
   16) புராணங்கள் சிறப்பாகக் கூறும் இரு வழிபாட்டு முறைகளைக் குறிப்பிடுக.
   17) சிவபுண்ணியங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
   18) சிவாசாரியாரை வணங்கி வீபூதி பெறுதல் எதற்குச் சமமாகும்?
   19) இறைவனுக்கு நிகழ்த்தப்படும் அபிடேகம் குறித்து நிற்கும் உட்பொருள் யாது?
   20) சிவோகம்பாவனை என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
2. சைவ நாற்பாதங்களில் ஒன்றாகிய கிரியை மார்க்கம் ஞானம் கிடைப்பதற்குக் காரணமாக அமையு மாற்றை விளக்கிக் காட்டுக.
3. சைவசமய நெறியில் சங்கம வழிபாடு பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.
4. ''ஒழுக்கமே சமய வாழ்க்கையின் உயிர் நாடி'' நீர் விரும்பும் சிவனடியார் ஒருவரின் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி இக்கூற்றினை தெளிவுபடுத்துக.
5. சிவாலய வழிபாட்டின்போது நாம் கைக்கொள்ள வேண்டிய முக்கிய விதிமுறைகளைக் கூறி, அவ்வழிபாட்டினால் கிட்டும் பலன்களையும் விபரிக்குக.
6. நான்கு ஆச்சிரமங்களில் ஒன்றாகிய பிரமச்சரியம் என்ற மாணவநிலை இந்து ஒருனவது வாழ்க்கையில் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுக.
7. சிவசின்னங்களின் மகிமை பற்றி திருமுறைகளில் கூறப்பட்டுள்ளவற்றைத் தொகுத்துத் தருக.
8. இந்து சமய மரபில் குருபாரம்பரியம் சிறப்புப் பெற்று வந்தவாறறை உதாரணந் தந்து எடுத்துக் கூறுக.
9. ஆலயங்களில் உள்ள திருவுருவங்களில் சிவலிங்கம் உணர்த்தும் தத்துவப் பொருள்களை விளக்குக.
10. பகவத்கீதை கூறும் நால்வகை யோகங்களில் ஞானயோகம் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
11. ''இந்துக்களின் பண்டிகைகளைக் குறிப்பிட்டு, அவற்றுளொன்றினைத் தேர்ந்தெடுத்து, அதனைத் தினம், சடங்கு, தத்துவம், சமுதாய முக்கியத்துவம் என்னும் அடிப்படையில் விளக்குக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

## ஓகஸ்ட் 1992

# (22) இந்துசமயம் I

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

முதலாம் வினாவுக்கு 30 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.

1. சுருக்கமான விடை தருக.
   1) ''திரயீ வித்யா'' என்றால் என்ன?
   2) இருக்குவேதத்தில் விஷ்ணுவுக்குச் சிறப்பாக வழங்கப்படும் அடைமொழி யாது?
   3) இருக்குவேதத்தில் உருத்திரன் மீது எத்தனை பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன?
   4) உபநிடதம் என்பதன் பொருள் யாது? உபநிடதம் இரண்டின் பெயர்களைத் தருக.
   5) பிரமசூத்திரம் எதை எதனடிப்படையில் விளக்குகின்றது?
   6) சைவாகமங்களின் எண்ணிக்கை எத்தனை? அவற்றிலே பிரபல்லியமானது யாது?
   7) திருமந்திரத்துள் எத்தனை ஆகமங்களின் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன?
   8) பகவத்கீதைக்குப் பின்பு கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்குச் செய்த உபதேசம் மகாபாரதத்தில் பெறும் பெயர் யாது?
   9) பதினெண் புராணங்களில் விஷ்ணு புராணங்கள் எனப்படுபவை யாவை?
   10) ''சித்தாந்த அட்டகம்'' என்றழைக்கப்படும் நூல்கள் யாவை?
   11) ''அத்துவிதம்'' என்பதற்கு மெய்கண்டதேவர் கொண்ட பொருள் யாது?
   12) ''சித்தாந்தம்' என்ற பெயர் முதன்முதலில் இடம்பெறும் தமிழ் நூல் யாது?
   13) ''புருஷகாரம்'' என்ற வைணவ விசிஷ்டாத்வைதக் கோட்பாடு எதனைக் குறிப்பது?
   14) ''வேதம் தமிழ் செய்த மெய்யன்'' எனப் போற்றப்படும் ஆழ்வார் யார்?
   15) இராமாவதாரக் கதையினைப் பாடி மகிழ்ந்த ஆழ்வாரின் பெயர் யாது?
   16) ''திருத்தொண்டத்தொகை'' எத்தனையாம் திருமுறையிலே இடம்பெறுகின்றது?
   17) திருநாவுக்கரசர் ''அப்பர்' என்ற பெயர் பெறக் காரணமாக இருந்தவர் யார்?
   18) ''சற்காரியவாதம்' எனச் சைவர் எதனைக் கூறுவர்?
   19) சைவசித்தாந்த மரபில் மல அடிப்படையில் உயிர்கள் எவ்வாறு பகுக்கப்படுகின்றன? மும்மலமும் இடம்பெறும் பிரிவின் பெயர் என்ன?
   20) வைணவ விசிஷ்டாத்வைதத்தில் ''துவயம்', என்பது எதனைக் குறிக்கின்றது?
2. அதர்வணம் ஆரம்பத்தில் ஒரு வேதமாக ஒப்புக்கொள்ளப்படாமைக்கான காரணங்களை விளக்கி பின்னர் அது நான்காம் வேதமாக எழுச்சிபெற்றவாற்றினைத் தெளிவாக்குக.
3. சைவசமய விளக்கத்திற்கு சைவாகமங்கள் எவ்வெவ் வழிகளில் உதவிபுரிகின்றன என்பதை விளக்குக?
4. வேதகாலச் சிந்தனையிலே உபநிடதங்கள் புரட்சியை ஏற்படுத்தின எனல் எந்தளவிற்குப் பொருத்தமாகும்?
5. இந்து தத்துவ நூல்களிற் பகவத்கீதை பெறும் பெருமதிப்பிற்கான காரணங்களை விளக்குக.
6. ''சிவத்தின் மேல் தெய்வமில்லை, சிவஞானசித்திக்கு மேல் ஒரு சத்தியமில்லை'' இக்கூற்றினை ஆராய்க.
7. சைவசமய குரவர் சைவ பாரம்பரியத்தினை வளர்த்தவாறறினை எடுத்துக் கூறுக.
8. வைணவ அர்த்த பஞ்சகஞானத்தின் விளக்கமாகத் திருவாய்மொழி அமைகிறது என்பதை வைணவ ஆசாரியார் எவ்வாறு விளக்கியுள்ளனர்?
9. ஆதிசங்கரருடைய அத்வைத வேதாந்தம் பெருவழக்கினைப் பெற்றமைக்கான காரணங்களை ஆராய்க.
10. தர்மக்கோட்பாட்டிலே கடமை வகிக்கும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.
11. ''திருவருள்'' சைவ சித்தாந்தத்திலே பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஓகஸ்ட் 1992

## (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

முதலாம் வினாவுக்கு 30 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்குப் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.

1. சுருக்கமான விடை தருக.

1) வேள்வியை விளக்கும் வேதப்பகுதி யாது?
2) பிராமணர்களை அவனியில் நடமாடும் தெய்வங்கள் என்று கூறும் வேதப் பகுதி யாது?
3) இருக்கு வேதத்தில் புரோகிதனாகப் போற்றப்படும் தெய்வம் யாது?
4) ஓம் எனும் பிரணவத்தின் உட்பொருளை விளக்கும் உபநிடதம் யாது?
5) யசுர் வேதம் கூறும் சதருத்திரியம் என்பது யாது?
6) ஆன்மார்த்த பூசை என்பது யாது?
7) மகேசுர பூசை என்பதை விளக்குக.
8) நித்திய பூசையில் இடம்பெறும் சோடச உபசாரம் குறிப்பது யாது?
9) தூலலிங்கம் என்பது யாது?
10) திருக்கோயிலில் பாடப்பெறும் பஞ்ச புராணங்களை உரிய ஒழுங்கிலே தருக.
11) பஞ்சகிருத்தியம் யாவற்றையும் ஒருங்கே காட்டும் தாண்டவம் யாது?
12 கைவல்லியம் என்பது யாது?
13. சரியைத் தொண்டென்பது யாது? சிவாலயத் தொண்டுகள் இரண்டின் பெயர் தருக.
14) வைணவ சமபிரதாயத்தின் அட்டசுயம்புதலம் எனபது யாது?
15) தேவாரம் பெற்ற ஈழத்துச் சிவதலங்கள் யாவை?
16) ஆழ்வார் விழா அல்லது அத்தியாயனோற்சவம் என்பது யாது?
17) ஆருத்திரா தரிசனம் என்பது யாது?
18) உழவாரப்பணி மூலம் சிறப்பெய்திய நாயனார் யார்?
19) பிராயச்சித்தக் கிரியை என்பது யாது?
20) அபரக்கிரியைகளில் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

2. சிவலிங்க வழிபாட்டின் தொன்மைமையும் தத்துவத்தினையும் விளக்குக.
3. திருமாலின் ஐந்து சொரூபங்களையும் சுருக்கமாகத் தெளித்து அர்ச்சாவதார வழிபாட்டினை விளக்குக.
4. அறத்தின் வழியினவே ஏனைய புருடார்த்தங்கள் எனும் கூற்றின் உண்மையை ஆராய்க.
5. ''பற்றுதலே முத்திக்கு வழி என்பது இந்துக்கள் கண்ட உண்மையாகும்''. கருத்துரை வழங்குக.
6. ஒழுக்கநெறி இந்துக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தினை வகிப்பதன் காரணத்தை விளக்குக.
7. சைவ நாற்பாதங்கள் மெய்யடியார்களின் வாழ்க்கையில் வெளிப்படுமாற்றினைத் தெளிவாக்குக.
8. வர்ணாசிரமதர்மக் கோட்பாட்டினை விளக்குக.
9. இந்துக்களின் வழிபாட்டிற் கோயில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
10. மகோற்சவம் என்பது யாது? அது உணர்த்தும் தத்துவங்களை விளக்குக.
11. சைவரும் வைணவரும் ஆடி அமாவாசைக்குத் தரும் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்து அது அனுட்டிக்கபடுமாற்றினை விபரிக்குக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

## ஒகஸ்ட் 1993

# (22) இந்துசமயம் I

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் **ஐந்து** வினாக்களுக்குமாக மொத்தம் **ஆறு** வினாக்களுக்கு விடைகள் தருக.

முதலாம் வினாவுக்கு 30 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.

1. சுருக்கமான விடை தருக.
   1) 'சுருதி' என வேதம் பெயர்பெறுவதற்கான காரணம் யாது?
   2) உருத்திரனும் விஷ்ணுவும் வேதத்தின் எப்பகுதியில் முதன்முதலாக பெருந்தெய்வங்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள்?
   3) உருத்திரனின் நூறு பெயர்களைக் குறிப்பிடும் யசுர் வேதப் பகுதி யாது?
   4) முக்திகோபநிடதம் எத்தனை உபநிடதங்களைக் குறிப்பிடுகிறது?
   5) உபநிடதம் வேதாந்தமென அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
   6) சைவாகமத்தின் உட்பிரிவுகள் எவை?
   7) சைவ நூல்களுட் சிவதருமோத்திரம் எவ்வகையைச் சேர்ந்தது?
   8) சைவ இலக்கியங்களுள் அடங்கன்முறை எனப்படுபவை யாவை?
   9) திருத்தொண்டத்தொகையின் விரிவாக அமைந்த நூல் யாது?
   10) பன்னிருதிருமுறைகளுட் காலத்தால் முந்தியதெனக் கருதப்படும் திருமுறை யாது?
   11) சைவம் எனும் பெயர் இடம்பெறும் முதல் தமிழ் நூல் யாது?
   12) சிவஞானபோதம் எந்த வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு என்று கருதப்படுகின்றது?
   13) தசாவதாரத்தில் இடம்பெறும் இராமாவதாரங்கள் யாவை?
   14) பதினெண் புராணங்களுள் இடம்பெறும் சிவபுராணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
   15) பன்னிரு ஆழ்வார்களுள் உன்னத நிலையில் வைத்துப் போற்றப்படும் ஆழ்வார் யார்?
   16) வேதாந்தி கூறும் விவர்த்தவாதம் யாது?
   17) வைணவ சம்பிரதாயம் போற்றும் அர்த்தபஞ்சகம் யாவை?
   18) திருமாலின் சொரூபங்களிற் சகலமக்களும் அருள்பெறக்கூடிய சொரூபம் யாது?
   19) சைவசித்தாந்தம் கூறும் முத்திநிலை யாது?
   20) பல்லாண்டு பாடிய சைவ வைணவப் பெரியார்களின் பெயர்களைத் தருக.
2. இருக்குவேதம் தெய்வீக சிந்தனைகளின் ஆரம்பகட்டத்தினை மட்டுமன்றி அக்கட்டம் மாற்றம் அடையத் தொடங்கும் நிலைமையினையும் தெளிவாகக் காட்டுகின்றது என்ற கருத்தினை விளக்குக.
3. சைவாகமங்கள் திருக்கோயில் வழிபாட்டிற்கு முக்கிய கவனம் அளித்திருக்கின்றன என்று கூறுவது எத்தளவுக்குப் பொருந்தும்?
4. ''வேதத்தின் முற்பகுதிகள் ஆரம்பித்து வைத்த தத்துவ ஆராய்ச்சியின் உச்சநிலையினை உபநிடதத்திலே கண்டுகொள்ளலாம்.'' இக் கூற்றினை விளக்குக.
5. ''பகவத்கீதையின் நோக்கம், கருமயோகம், தன்னலமற்ற சேவை மார்க்கம் என்பதைச் சிறப்புற எடுத்துக் கூறுவதேயாகும்.'' ஆராய்க.
6. சைவசித்தாந்த வளர்ச்சியில் உமாபதிசிவாசாரியர் வகிக்கும் இடத்தினை மதிப்பிடுக.
7. சைவசமய வளர்ச்சியிலே அன்புநெறி வகிக்கும் முக்கியத்துவத்தினை தேவாரமுதலிகள் ஒருரிவன் வாழ்க்கையினையும் வாக்கினையும் ஆதாரமாகக்கொண்டு விளக்குக.
8. வைணவ சம்பிரதாயத்தின் பிரதான கோட்பாடுகளைத் தெளிவாக்கும் இரகஸ்ய கிரந்தங்களில் இடம்பெறும் விடயங்களைச் சுருக்கமாக விளக்குக.
9. இறையான்மத்தொடர்பு பற்றிய கருத்து வேறுபாடே வைதீக மதங்களை வேறுபடுத்தும் சிறப்பம்சம் என்று கூறலாகுமோ என்பதைத் தெளிவாக்குக.
10. இந்துசமயத்திலே கர்மக் கோட்பாடு பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
11. அறிவைப் பெறும் வழிகள் யாவை? சுருக்கமாக விளக்குக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை

# ஓகஸ்ட் 1993

## (22) இந்துசமயம் II

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடைகள் தருக.

முதலாம் வினாவுக்கு 30 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 14 புள்ளிகளும் வழங்கப்படும்.

1. சுருக்கமான விடை தருக.
   1) இருக்கு வேதத்திலுள்ள காயத்திரி மந்திரம் எதனைத் தியானிக்கின்றது?
   2) ஆரணியகம், வனநூல் என அழைக்கப்படுவதற்கான இரு காரணங்களைத் தருக.
   3) சரணாகதி வேதம் என வைணவ ஆசாரியர் போற்றும் நூல் யாது?
   4) யோகநெறி விளக்கமாக அமையும் திருமுறை யாது?
   5) லிங்கோத்பவர் சிவன்கோயிலில் அமைந்திருக்கும் இடம் யாது?
   6) வைணவர் திருக்கோயிலிலே 'பஞ்ச பரிவாரம்' எனப் பொதுவாக வழங்கப்படுவன யாவை?
   7) பத்திரலிங்கம் என்பது யாது?
   8) சகஸ்ரநாமஸ்தோத்திரம் என்பதை விளக்குக.
   9) ஞானநெறி என்பதனை விளக்குக.
   10) குழந்தைகளுக்கு ஏடு தொடங்கும் நாள் யாது?
   11) சாம்பவதீட்சை என்பது யாது?
   12) மகோற்சவ கொடியேற்றம் குறிக்கும் தத்துவம் யாது?
   13) சங்கம வழிபாடு என்று சைவர் கூறுவது வைணவ மரபிலே எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
   14) சிரார்த்தம் என்பது யாது? இரு சிரார்த்தக் கிரியைகளைக் குறிப்பிடுக
   15) குருபூசை என்பதனை விளக்குக.
   16) ஆவாகனம் என்பது யாது?
   17) திருச்சிற்றம்பலம் சொல்லப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
   18) புராணபடலம் என்றால் என்ன?
   19) சப்தவிடங்கத் தலம் எனச் சைவர் கூறுவது யாது? இரு சப்தவிடங்கத் தலங்களைக் குறிப்பிடுக.
   20) சக்கரத்தாழ்வார் கோயில் என ஈழத்தவர் குறிப்பிடும் கோயில் யாது?
2. சைவசித்தாந்தி கூறும் நாற்பாத நெறியினை ஆச்சிரமதர்மத்தோடு ஒப்பிட்டு விளக்குக.
3. இந்து சமுதாயத்தின் செயற்பாட்டிற்கு ஆதரவாக அமைக்கப்பெற்ற வருணப்பகுப்பு அச்சமுதாயத்தில் ஏற்படுத்திய பாதிப்பின் தன்மைகளை விளக்குக.
4. தர்மக் கோட்பாடே இந்து சமயக் கிளைகளிடையே காணப்படும் அதிமுக்கியமான இழையெனல் பொருந்துமோ என்பதை ஆராய்க.
5. ''அறம் பொருள் இன்பமாம் முப்பொருளும் வீட்டு நெறிக்குச் சாதனமாவனவேயன்றித் தனித்துவமுடையவையல்ல''. விளக்குக.
6. பல்லவர்கால மெய்யடியார் வாழ்வும் வாக்கும் பக்தி மார்க்கத்திற்குச் சிறப்பிளிக்குமாற்றினைத் தெளிவுறுத்துக.
7. சங்கம வழிபாடு சைவரிடையே பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக
8. இந்துக்களின் சமயவழிபாட்டிற் கோயில் முக்கிய இடம் பெற்றமைக்கான காரணங்களைத் தெளிவாக்குக.
9. இந்து தர்ம நூல்கள் விதந்து கூறும் இலட்சிய வாழ்க்கையின் சிறப்பமிசங்களை விளக்குக
10. ''இந்து சமயத்தினை ஒரு தத்துவநெறி என்பதிலும் அறநெறி என்று கூறுவதே பொருத்தமாகும்'' ஆராய்க.
11. முத்தியடைதலே இந்துக்களின் இலட்சியமாகும். இதனை அடையும் மார்க்கங்கள் பற்றி வைதீக மதங்கள் கூறுவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

8

# புதிய உயர் கல்லூரி

## (NEW COLLEGE OF HIGH STUDIES)

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்

## G. C. E A/L கலை வர்த்தக வகுப்புக்கள்

பகல்நேர, வார இறுதிநாள் (Day, Weekend Classes) வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. மகேந்திரன் |
| கணக்கியல் | — | திரு. D. SAM |
| வர்த்தகம் | — | திரு. தேவா, திரு. பசில் |
| இந்து நாகரீகம் | — | திருமதி. S அருள்நங்கை |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து சமயம் | — | திரு. சிரிதரன் |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அளவையியல் | — | திரு. சோதிலிங்கம் |
| அரசியல் | — | திரு. கியூபேட் |
| வரலாறு | — | செல்வி. நாகராணி, திரு. ஸ்ரீதரன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. மோசேஸ் |
| கிறிஸ்தவம் | — | அருட்சகோதரர், திரு. கொலின்ஸ் |
| சித்திரம் | — | திரு. சிவப்பிரகாசம் |

# கெயின்ஸ் கல்வி நிலையம்

கிறிஸ்தவ கல்லூரி முன்பாக — கோப்பாய்

## G. C. E A/L கலை வர்த்தக வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. மகேந்திரன் |
| கணக்கியல் | — | திரு. D. SAM |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| அளவையியல் | — | திரு. R P. சர்மா |
| இந்து நாகரீகம் | — | திரு. சிரிதரன் |
| இந்து சமயம் | — | திரு. சிரிதரன் |
| தமிழ் | — | திரு. பிரதீபன் |
| புவியியல் | — | திரு. மோசேஸ் |
| அரசியல் | — | திரு. ஹியூபேட் |


# காந்தம்

GANTHAM

ஆசிரியர் கா யோ : கிரிதரன்

அச்சுப்பதிப்பு:

ஸ்ரீ சாயி அச்சகம்
2/5, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை.